மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இரகசியங்களை முன்கூட்டிச் சொல்லக் கூடாது. பரிசளிப்பு விழாவின்போது தெரியும்.

DR. H. V. HANDE : May I know the total number of persons who have received this medal, Chief Minister's Police Medal for the year 1967–68, 1968–69 and 1969–70? Can the Hon. Chief Minister give us the figures?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மொத்தம் 24 பேர்.

திரு. கே. விநாயகம்: இப்படித் திறமையாகப் பணியாற்றிய நமது காவல் துறை அதிகாரிகளுக்கு வெறும் மெடலை மட்டும் கொடுத்து திருப்திப்படுத்துவதோடு கூட அவர்களுக்கு ஒன்றிரண்டு இன்கிரிமெண்டுகளை அதிகமாகக் கொடுத்தோ அல்லது ப்ரொமோஷன்கள் கொடுத்தோ ஊக்குவிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: வெறும் மெடலை மட்டும் கொடுப்பதாக திரு. விநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். வெறும் மெடல் மட்டுமல்ல. தலைசிறந்த பணிக்கு காவலர்கள், தலைமைக் காவலர் கள், தீ அணைப்பவர்கள், முன்னணித் தீ அணைப்பவர்கள், இயந்திர பம்மியர் வலவர், இப்பதவிகளுக்கு இணையான மற்ற பதவிகள்—ஐந்து பதக்கங்கள்; ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 பரிசும் தரப்படு கிறது. சப்-இன்ஸ்பெக்டர்கள், காவல்துறை இன்ஸ்பெக்டர்கள், கோட்ட தீ அணைப்பு அதிகாரிகள், அப்பதவிக்கு இணையான பதவிகள் —10 பதக்கங்கள், ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 2,000 ரொக்கப் பரிசும் தரப்படுகிறது. காவல் துறை கண்காணிப்பாளர்கள் (தரம் 1, 2, 3) கோட்டத் தீயணைப்பு அதிகாரிகள் தரம் (1 & 2)—5 பதக்கங்கள், ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 3,000 ரொக்கப் பரிசு தரப்படுகிறது. வீரச் செயல்களுக்கு—பதவித் தரம் என்னவாக இருப்பினும் ஐந்து பதக்கங்களும் ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 3,000 ரொக்கப் பரிசும் தரப்படுகிறது. ஒரு திருத்தம்—முன்பு 24 பேர் என்று சொன்னேன், மொத்தம் 25 பேருக்கு பரிசு அளிக்கப்படுகிறது.

காவல்துறை அதிகாரிகள் நிகராடையில் மாற்றம்.

* 112 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகப் போலீசார் அணியும் குல்லாய், உடைகள் முதலியவற்றை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(இ) மாற்றம் குறித்து போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் அரசுக்கு எழுதியுள்ளாரா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) 1967-இலிருந்து மாநிலக் காவல் துறை அலுவலர்களும் சார்நிலைக் காவல் துறை அலுவலர் களும் தலையணியாக “பீக்” தொப்பிகளுக்குப் பதிலாக “பெரட்” தொப்பிகளை அணிய அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1969 இலிருந்து இந்தியக் காவல் துறை அலுவலர்களும் “பெரட்” தொப்பிகள் அணிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளனர். காவல் துறை அலுவலர் களின் நிகராடையை மாற்றும் செயற்குறிப்பு எதுவும் முடிவுறு நிலையில் இல்லை.

(இ) இப்பொழுது இல்லை.

1970 ஆகஸ்ட் 29]

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, போலீசாரின் உடை 1947க்குப் பின்னர் ஏற்பட்டுள்ள புதிய சுதந்திர உணர்வைப் பிரதி பலிப்பதாக இல்லை என்பதைக் கருதி அரசு அந்த உடையை மாற்ற ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: இப்போது உத்தேசம் இல்லை.

Agricultural University

* 117 *Q.*—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(*a*) whether any Central grant is being secured by the State Government for starting an Agricultural University in this State; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏறக்காமு 2 கோடி ரூபாய் மத்திய உதவி கிட்டு மென்று எதிர்பார்க்கப்படுகிறது. வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கான மசோதா தயாரானதும் மத்திய மானியம் பெறுவது பற்றிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது: தலைவர் அவர்களே, புதிதாக அமைக்கப்பட இருக்கும் வேளாண்மைப் பல்கலைக்கழகம் எங்கே அமைக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கோவையில் அமைக்கப்பட இருக்கிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : தமிழ்நாட்டின் நெற்களஞ்சிய மான தஞ்சையில் விவசாயத்திற்காக அதிகப்படியாக அரசு பணம் செலவழிக்கும் நிலையில் தஞ்சை மாவட்டத்தில் அந்தப் பல்கலைக் கழகத்தை அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஒரு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான அளவுக்கு கோவையில் நல்ல வசதிகள் இருக்கின்றன. நல்ல பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. வேளாண்மைக் கல்லூரியே இருக் கிறது. கலைக் கல்லூரி தேவை, அதுவும் இருக்கிறது. டொமஸ்டிக் ஸயன்ஸ் கல்லூரியும் இருக்கிறது. கிட்டத்தட்ட 750 ஏக்கர் பண்ணை இருக்கிறது. காட்டு இலாகாவும் கல்லூரியில் இணைக்கப்பட்டிருக் கிறது. இவைகளை எல்லாம் ஆலோசித்து அதிகப்படியான செலவு இல்லாமல் கோவையில் பல்கலைக்கழகத்தை அமைக்கும் சூழ்நிலை இருப்பதால் கோவையில் வைக்கப்பட்டிருக்கிறது.

மதுரை வேளாண்மைக் கல்லூரி

* 118 வினா—திரு. ஆர். கருப்பையா : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-ம் ஆண்டு, ஆகஸ்டு 22-ம் தேதி அளவில் மதுரை விவசாயக் கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டது உண்மையா?